உ

மதுரைவீரசுவாமிபேரில் பதிகம்.

கோள்டன் அச்சியந்திரசாலையிற்

பதிப்பிக்கப்பெற்றது.

1914.

17-18 காளத்தியப்ப முதலிவீதி மதராஸ் என், சி.

உ

கடவுள் துணை.

மதுரைவீர சுவாமிபேரில்

பதிகம்.

காசியில்பிறந்ததும் மாலையதுபூண்டதும் கானகந் தனிற்சென்றதும், கனமதுரைமீனாக்ஷி தன்னருள்வரம் பெற்றதும் கலியுகதெய்வமாகி ஆசைபொன்னாபரணம் தேசம்புகழ்ந்திட அறையில்நிறைகிண்கிணி புமாய், அங் கெங்குந்தெய்வமாய் யெங்குந்துதித்திட ஆசையுடன் பூசைவாங்கும், தேசந்திரிந்துமே ஆசையுடன் தொழு தாலும் தென்மதுரைக்கீடாகுமோ, தேவனேஉன்மீதில் ஆசைசவிபாடிடத் தெரிசனந்தந்தருளுவாய், மாசசம தனிலென்ன மறுதிபிழையிருந்தாலும் வரந்தரமனமிதங் குவாய், வளர்ந்தேர செல்வமும் தளர்ந்திடா தாண்மை யும் வரந்தரும் மதுரைதுரையே. (க)

உத்திரதேசத்தில் உயர்ந்ததொருகாசியில் உற்பத் தியானதுரையே, உன்னுடைய கீர்த்தியை யென்னாவில் விளங்கவும்உருவமும்நானறிகிலேன், சத்திரியவம்மிஷம் விளங்கவேபிறந்திட சந்திரகுல ராஜன்மகனே, சதாநித்

தியம்உன்பாதம் அர்ச்சித்தபேர்களும் சாயுச்சிய முத்தி பெறுவார், பத்திரங்கொண்டுநீ மதுரைமீனாட்சிதன் பாதத்தை அர்ச்சித்துமே, பறிதானவெண்புரவி தனில்மீதிலேறியே பாலகனைக் காக்கவருவாய், சித்திரம்போலொத்த ரத்தினப்பொம்மியபரைசெல்வனேசிறையெடுத்தாய், சிவன்மதுரைசொக்கரிட பாதத்தை அர்ச்சித்து ஜெயம் பெற்ற மதுரைதுரையே. (௨)

தட்டியுஞ்சல்லடமு மிட்டவதரித்தங்கி தரித்ததொரு சாலுவையுமாய், தனகனகபொன்பெற்ற சரிகைதுப்பட்டியும் தங்கத்தின் கைக்கடகமும், அட்டியில்லாமலே யிட்டதொரு பாதகவொறடு ஆபரணம் அபரஞ்சிகைக்கடகமும், ஆறுபொன் மாத்துள்ள நிறமானமேனியும் ஐயன்விபூதியழகும், கூடியக்கச்சைபொடு செங்கையில்பீதாம்பரம் கழுத்தினில்முத்தாரமும், கதிரவன்ஒளிபோலே மகுடமுந்தரித்துயென் கண்ணெதிரில் வந்தருளுவாய்; பெட்டுதிசைதனிலுள்ள துஷ்டப்பிசாசுகளையெடுத்துமே கிழித்தெறிந்தாய், யேவிவரும் முனிகளைதாவிவரும்பேய்களை எடுத்தெறியும் மதுரைதுரையே ()

வல்லயம்வாளம்பு கட்டாறிகளைதடி வரிசையுடன் தெண்டுகொண்டு, வடிவானமது... துரை சக்கிராயுதங்

கொண்டுவந்தென்னைரட்சிக்கவும், கொல்விமலைவேங்கை யைநீ ஒடிபில்லியேவலைக் குறுக்கவேமெரித்தவீரா, கோ வென்றுகூச்சலிட் டேவல்பிசாசுகளைக் கொன்றுகழுவே த்திவைத்தாய், அல்விதுரை மறவரைக் கள்ளரைமெயி த்துமே அனைவருடன் கீர்த்திபெற்றாய், அன்பானபொ ம்மியரும் கனமதுரைவீரய்யனும் அழகுபுரவி தனிலேறி யே, கலியுகந்தன்னிலே மெய்யானதெய்வமே நீகர்மவினை தீர்த்துவைப்பாய், காசியில்பிறந்துமே தென்மதுரையா ண்டவா கர்த்தனே மதுரை துரையே. (௪)

பட்டயம்நேரிசம் சங்கிலிப்பரிசைவாள் பாங்கான சுத்திகொண்டு, பகைத்ததொருகள்ளரைக் கறுவருத்திட வென்று பரிதனில்மீதேறியே, சட்டைசெய்யாமலே வெகுகோடிமறவரைச் சாதித்த துரைவீரா, சாலவேஉன் பாதம் நம்பினேன் அடியேனைக் கார்க்கதெதி அருளவரு வாய், அட்டயம்ஆனதொருசுக்குமாந்தடிகொண்டு அறு ங்கானகத்தைவிட்டு, அதட்டியேவந்திடும் மதுரைநகர் தேசிகா அடங்காத இராஜதீரா, பட்டயம்வேள்புரவி தனில்மீதிலேறியே பாலகனைக் கார்க்கவருவாய், பட்ச மாம்யெந்தனுடன் பக்கலில்வந்திடும் பார்தனில் மதுரை துரையே. (௫)

மந்திரம்தந்திரம் பகையானசூனியம் மாளவே கரு வறுத்தாய், மதுரைமீனாட்சிஅருள் வரம்பெற்றதேசிகா மைந்தனைக்காக்கவேணும், அந்திரமானதொரு மந்திர பீஜாட்சரம் ஆதிமுதல்மாராஷ்டகம், அன்பான கன்னி டியம் தொட்டியம்லாடயங்களை அநேகவித பாஷைஅறி வாய், தொந்தமாம் தென்மதுரை சொக்கரிடகோவிலில் தோராதபூசைவாங்கும், தோளிலேகிண்ணாரம் வைத்து மேயெந்தனுடன் துயர்தனைத் தீர்க்கவருவாய், தந்திரஞ் செய்திட்ட சத்துருக்கள்தனைவென்று தரணிதனில் கீர் த்திபெற்றாய், தயவாகவரந்தரும் கடகம்வளர்ந்தவா பா லனான் மதுரைதுரையே. (௬)

இன்பமாய்பொம்மியரும் கணமதுரை வீரையனும் யிடியம்பு தடிகருப்பும், யேகவெள்ளஞ்சூழ் வானவர்நடு ங்கிட யிருபுறமுங்கவரிவீச, பண்பான மதுரைதுரை மண்டலீகர்சூழ்ந்திடப் பாலனைக் காக்கவருவாய், பரு வட்டமானதொரு ஆலவட்டங்களொடு பலகலையறிந்த துரையே, உம்பர்கோன்பதம்பெற்று உத்தமிஅருள்பெ ற்று உலகினில்கீர்த்திபெற்று, உன்னுடைய மகிமையை விளங்கிடபூமியில் உருவமாய் வந்துகாப்பாய், தன்பெ ருமைபுகழ்ந்திடும் பூமிதனில்மனிதர்கள் தைரியமளிக்க

வென்று தயவாகசக்கரங் கைதனில்வாங்கியே தலைவா
சல்தான்வரும் தாஷ்டீகமதுரை துரையே. (எ)

அண்டங்களதிரவே வெகுபேர்நடுங்கவே ஆகாசம்
நெக்குவிடவே, அதிர்ந்திடபூமியும் கலங்கிட ஆழியும்
அரசனும்பயணமிடவே, முண்டங்கள்முறையிடக் கண்
டங்கள்கரைந்திட முரசுகள்தான்முழங்க, மும்மாடஒட்
டியம் வெகுகோடிசல்லியம் முனையறிந் திட்டதுரையே,
மண்டைகளுருண்டிட தேசங்கள்பொடிபட மன்னர்து
ரைபரிமீதிலே, மட்டுப்படாததொரு காளிகள்நடுங்கிட
மகாதேவ மதுரைதுரையும், தண்டமுதண்டமாய் பூமிக
ளதிர்ந்திட தற்கார்க்க வந்தருளுவாய், தையலுடபாக
னேபொம்மியணவாளனே தரணிபுகழ்மதுரை துரையே.

உன்னாலே யென்வினையர் உலகத்தில் உன்கீர்த்தி
உரைத்துமேநானிருக்க, உண்மையாய்குறைவில்லா வா
ங்களைத்தந்துமே உகந்துடன் கார்த்திருப்பாய், முன்னா
லேநான்செய்த கருமத்தைநீக்கியே முத்திபெறமோட்ச
ந்தருவாய், முத்துவீரையனே யிரத்தினக்கருப்பனே
மூலமாய்நின்ற துரையே, அன்னாளில் நான்சொன்ன ஆ
சைகவியுன்மீதில் அய்யனேபிழையிருந்தால், ஆதரித்தெ

ந்தனிட பிழைதனைப்பொறுத்துமே அன்புடன்காத்தரு ளுவாய், பென்னாலேயாவதுயாதொன்றுமில்லையே யிணை யடியைஅருளவென்று, பென்னேரம்வந்துநான் உன்பா தம்நம்பினேன் யின்பமாய் மதுரைதுரையே (௯)

அவ்வென்று நானுன்னைத் தினமுந்துதித்திட அரு ள்தரவந்தருளுவாய், ஆதரித்துந்தனிட பாதத்தை நம்பி நான் அடியிணைச் சரணமென்றேன், தவமென்று சஞ்ச லம் வினைதீர்க்கவந்தருள தானானமதுரை துரையே, தன் னுடையகீர்த்தியை பென்னால் விளங்கவும் தைரியந்தந்த ருளுவாய், யவ்வென்றுமதுரை துரை விலையானதொட்டி யனே வந்தென்னைரட்சித்திடும், வட்டமாஞ்சக்கரம் கை தனில்வாங்கியே வந்தென்னை காத்தருளுவாய், பவ்வெ ன்றுஅருள்தர யெந்தனைக்காக்கவே பரிதனில்மீதேறி யே, பட்டவர்த்தனர்சூழ அடிபேன்முன்வந்திடும் பரா க்கிரம மதுரைதுரையே (௧௦)

பத்துமேலொருகவி யிஷ்டமாய்ப்பாடினேன் பால னான் மதுரைதுரையே, பட்சமாய்உன்பாதம் அர்ச்சிக்க பென்னாலே பலபுத்தியும்நானறிகிலேன், முத்துமுத்தை யனே ரத்தினவீரையனே மோட்சமே தந்தருளுவாய்,

மூடனான்உன்மீதில் பாடினேன் ஆசைகவி மூலமேபிழை யிருந்தால், சித்தத்தில்வந்துநீ தெரிசனந்தந்துமே சிரிய னைக்காத்தருளுவாய், செல்வனே யென்னுடைய அருமைதனைநீக்கியே செல்வத்தை நீதருகுவாய், யெத்தேச காலமும் அடியேனைவிட் டகலாமல் ஏழையிடங் கொலு விருப்பாய், எண்ணுந்துதித்தேன் தென்மதுரை அன்ன நகர்பொன்மதுரைக்கார்த்த மதுரைதுரையே. (கக)

மதுரைவீர சுவாமிபேரில் பதிகம்

முற்றிற்று.

———